அனுப்புநர்

டாக்டர் கே. கோபால், இ.ஆ.ப.
பேரூராட்சிகள் ஆணையர்
குறளகம்
சென்னை 600 108

பெறுநர்

அனைத்து மண்டல பேரூராட்சிகள் உதவி இயக்குநர்கள்

<u>ந.க.எண். 10285/2007 இ 3 நாள். 7–8–2007</u>

அய்யா,

பொருள் – பணிகள் – பேரூராட்சிகள் நிர்வாகம் – பேரூராட்சிகளில் பல்வேறு திட்டப் பணிகள் மற்றும் பொது நிதிப் பணிகள் மேற்கொள்வது – அளவுப் புத்தகங்கள் பராமரிப்பது – தொடர்பாக

பேரூராட்சிகளில் பல்வேறு மைய மற்றும் மாநில அரசு நிதியுதவியின் கீழ் பணிகள் நடைபெற்று வந்துள்ளன/நடைபெற்று வருகின்றன.

மேலும் பேரூராட்சி பொது நிதியிலிருந்தும் பல்வேறு பணிகள் நடைபெற்று வந்துள்ளன/நடைபெற்று வருகின்றன.

பேரூராட்சிகளில் வேலைகள் தொடர்பான அளவுப் புத்தங்கள் தணிக்கைக்கு காண்பித்தல் கட்டாயமாகும், ஆனால் தணிக்கைக்கு காண்பிக்கப்பட்ட பின்னர் அளவுப் புத்தங்கள் முறையாக முடிக்கப்பட்டு பாதுகாக்கப்படாத நிலை நிலவுகிறது. சில நிகழ்வுகளில் தணிக்கைக்கு பின்னர் இந்த அளவு புத்தங்கள் சரிவா பராமரிக்கப்படவில்லை என புகார்கள் வரப்பெற்றுள்ளன, எனவே இனி வருங்காலங்களில் தவறாமல் தணிக்கை முடிவுற்றபின் செலவுச் சீட்டுகள் மற்றும் அளவுப் புத்தங்கள் முறையே குறைந்தது 10 ஆண்டு முடிவாக முடிக்கப்பட்டு (D.Dis) பாதுகாக்கப்பட வேண்டும். எனவே அனைத்து பேரூராட்சி செயல் அலுவலர்களுக்கும் உரிய அறிவுரைகள் வழங்கி, இதனை பேரூராட்சிகளுக்கு ஆய்விற்கு செல்லும்போது கண்காணித்திடவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இக்கடிதத்தினை பெற்றமைக்கான ஒப்புதலை அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**ஒம்/– கே.கோபால்**
இயக்குநர்